[1971 ஜூலை 24

திரு. வீ. மலைக்கண்ணன் : தலைவரவர்களே, இந்தச் சாலை 10 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப் பட்டு பஸ்ஸுகள் போய் வருகின்றன. இருந்தாலும், அந்தச் சாலை யிலே பாலம் கட்டப்படாமலும், மெட்டல் பரப்பப்படாமலும் இருப்பதால், பஸ்கள் போக்குவரத்திற்கு பாதகம் ஏற்படுகிறது. அதை நல்ல பாதையாக செய்ய, இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தச் சாலையை 1960–61-ம் ஆண்டில் பராமரிப்பதற்காக "பேருந்து சாலை திட்டத்தின் கீழ்", மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த சாலையிலே மெட்டல் பரப்ப வேண்டும் என்பதுதான் கோரிக்கை. இதற்கு 6½ லட்சம் ரூபாய் செலவாகும் என்று சொல்லுகிறார்கள். நிதி வசதியைப் பொறுத்து, காரியங்கள் விரைவாக தொடங்கப்படும்.

வெளி மாநிலங்களிலிருந்து கதர் வரவு.

* 432 வினு—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்கு தற்போது வெளி மாநிலத்தில் இருந்து கதர் வரவழைக்கப்படுகிறது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம்.

(இ) தமிழகத்தில், கதர் உற்பத்தி, கதர் விற்பனை இரண்டிலும், கதர் கிராமத் தொழில் வாரியம் ஈடுபட்டுள்ளது. விற்பனையின் தேவைக்கேற்ப, தமிழ் நாட்டில் உற்பத்தியாகாத கதர் ரகங்களை, வெளி மாநிலக் கதர் நிறுவனங்களிடமிருந்து வாங்க வேண்டியது அவசியமாகவுள்ளது. படுக்கை விரிப்புகள், சமக்காளம், மேலங்கித் துணிகள் போன்ற மிகத் திண்ணிய ரகக் கதர், மிகவும் மெல்லிய கதர், கதர்பட்டு, கம்பளி ரகங்கள் முதலியன வெளி மாநிலங்களிலிருந்து வாங்கப்படுகின்றன.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, ஜமக்காளம், படுக்கை விரிப்புக்களை வெளி மாநிலத்திலே இருந்து வரவழைப்பது நம்முடைய மாநிலத்திலே உள்ள கைத்தறி தொழிலாளர்களை பாதிக்கும் என்று சொல்லுகிறார்கள். எனவே, அதை எல்லாம் மாற்றி அமைக்கக் கூடிய அளவிலே, கைத்தறி ஜமக்காளம், படுக்கை விரிப்பு போன்றவைகளை பொங்கல், தீபாவளி போன்ற விசேஷ பண்டிகைகளின் போது மக்கள் வாங்கி அணியச் செய்ய வேண்டும் என்று ஊராட்சி மன்றங்களுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் இந்த அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : உறுப்பினர் அவர்கள் கைத்தறியைப் பற்றி சொல்லுகிறார்கள். இது கதர் பற்றிய வினு. கைத்தறித் துணிகள் நல்ல முறையிலே விற்கப்பட வேண்டும் என்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இந்த அரசாங்கத்

1971 ஜூலை 24]

திற்கு கிடையாது. மோட்டா ரக ஜமக்காளமும், படுக்கை விரிப்பும்தான் வெளி மாநிலங்களிலே இருந்து வரவழைக்கப் பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட மோட்டா ரகங்களை—தடித்த நூலினைக் கொண்ட ரகங்களை தமிழ் நாட்டிலே நாம் உற்பத்தி செய்யவில்லை. எனவேதான் வெளி மாநிலங்களிலே இருந்து வாங்குகிறோம்.

திரு. இ. எஸ். தியாகராசன்: தலைவரவர்களே, வெளி மாநிலங்களிலே இருந்து கதர் வாங்கப்பட்டால், நம் மாநிலத்திலே இருக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு குறையாதா என்பது பற்றி அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கைத்தறி நெசவு தனியாகவும், கதர் நெசவு தனியாகவும் செயல்படுகிறது. எனவே, இந்த மாதிரி கதர் விரிப்புகளை வெளி மாநிலங்களிலே இருந்து வரவழைப்பதால், நம்முடைய கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப் பட மாட்டார்கள். கதர் நெசவு என்று சொல்லும் பொழுது நாம் ஏற்கனவே பல ஆண்டுகளாக இப்படி மோட்டா ரகங்களை வர வழைத்திருக்கிறோம். இந்த மோட்டா ரகம் 16-வது நெம்பர் நூலிலே நெய்யப்படுகின்றது. இப்படிப்பட்ட ஜமக்காளம், படுக்கை விரிப்புகளை மாத்திரம்தான் நாம் வெளி மாநிலங்களிலே இருந்து வரவழைக்கிறோம்.

திரு. ஏ. எம். இராஜா: வெளி மாநிலங்களிலே இருந்து மோட்டா ரக கதர் ஜமக்காளங்களும், படுக்கை விரிப்புகளும் வர வழைக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நம் மாநிலத்திலேயே கைத்தறி ஜமக்காளமும், படுக்கை விரிப்புகளும் பவானியிலேயும், சென்னிமலையிலேயும் தயாரிக்கப்படும்பொழுது, இப்படி கதர் வெளி மாநிலங்களிலே இருந்து இறக்குமதி செய்வ தால், அந்த வியாபாரம் இங்கே பாதிக்கப்படுகிறது. எனவே, வெளி மாநிலங்களிலே இருந்து இப்படி இறக்குமதி செய்வதை இந்த அரசு தடை செய்ய ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கதர் ஜமக்காளம், கதர் போர்வை என்பது வேறு. நம்முடைய உறுப்பினர் பவானி யிலேயும், சென்னிமலையிலேயும் நெய்யப்படும் கைத்தறி ஜமக் காளத்தைப் பற்றி குறிப்பிடுகிறார்கள். நாம் வெளி மாநிலங்களிலே இருந்து இறக்குமதி செய்வது மிக மோட்டா ரகமாக இருப்பதால் தான், அதை இறக்குமதி செய்கிறோம். நம் மாநிலத்திலே இன்னும் நல்ல நூலைப்போட்டு, 48 கதிரில் உற்பத்தியாகும் நூலைப்போட்டு, நெய்ய திட்டம் வகுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே, இந்த மோட்டா ரகங்களை வெளி மாநிலங்களிலே இருந்து வரவழைப்பது தவறில்லை. ஏனென்றால், இது எல்லாம் அகில இந்திய ரீதியிலே இயங்கும் கதர் நிறுவனங்களிலே இருந்து வரவழைக்கப்படுகிறது.

திரு. மா. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து வருகின்றவை அங்கேயே ஹேண்ட் பிரிண்ட் செய்யப்பட்டுவருகின்றன. அவற்றை வெள்ளைத் துணிகளாக வர

வழைத்து இங்கேயே ஹேண்ட் பிரிண்ட் செய்ய ஏற்பாடு செய்தால், இங்குள்ளவர்களில் பலருக்கு வேலை வாய்ப்பு ஏற்பட வசதியாக விருக்கும் என்று, அரசு அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, கையால் பிரிண்ட் செய்வதென்பது ஈரோட்டில் நடைபெறுகிறது. இப்பொழுது நாம் இங்கு விவாதிப்பது ஜமக்காளம், போர்வை போன்றவற்றைத்தான். அங்கேயே வெள்ளை செய்யப்பட்டு இங்கு அனுப்பப்படுவதால் இங்கு ஒன்றும் செய்வதற்கில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, கதர் சில்க் எல்லாம் வெளி மாநிலங்களிலிருந்து வருகிறதென்று சொன்னால், நம்முடைய மாநிலத்தில் கதர் சில்க் உற்பத்தியை உயர்த்தும் எண்ணம் அரசுக்கு இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, 62 லட்சம் ரூபாய்க்கு கதர்ப் பட்டு உற்பத்தி செய்கின்றோம். வெளி மாநிலங்களிலிருந்து, குறிப்பாக, மேற்கு வங்கத்திலிருந்து 16 லட்சம் ரூபாய் அளவுக்கு வரவழைக்கப்படுகிறது. இங்கே உற்பத்திக்கு அதற்கு மேல் வழியில்லை என்ற காரணத்தால்தான் வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வரப்படுகிறது.

திரு. எம். முத்தையா : பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வருகின்ற கதர் ஆடைகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கின்றார்கள். அங்கே ஊராட்சி ஒன்றியங்களின் ஆசிரியர்களை கம்பெல் பண்ணி அவர்களை வாங்கிக் கொள்ளவோ அல்லது விற்றுக் கொடுக்கவோ செய்யும் நிலைமை யிருக்கிறது. ஊராட்சி ஒன்றியக் கமிஷனர்களின் பேச்சைத் தட்டிக் கழிக்க முடியாத சூழ்நிலை அந்த ஆசிரியர்களுக்கு ஏற்பட்டு விடுகிறது. ஆகையினால் வெளி மாநிலங்களிலிருந்து இந்தக் கதர்ப் பொருட்களை நமது மாநிலம் வாங்காமலிருக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, கொஞ்சம் கொஞ்சமாக அந்தக் கட்டாயம் என்பதேயில்லாமல், மான்யமும் கொடுத்து விற்பது போன்ற முறையில்லாமல், மற்ற துணிகளோடு ஒப்பிட்டு கதர் விற்பனை நடைபெற வேண்டும் என்று திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. கட்டாயம் என்பது நாம் விரும்பும் ஒன்றல்ல. அதைத் தொடர்ந்து செயல்படுத்தும் எண்ணமுமில்லை. முன்பெல்லாம் அரசாங்கம் கட்டாயமாகக் கடன் கொடுத்து வந்தது. அப்படிச் செய்வதை நிறுத்த வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தீர்மானித்திருந்தார்கள். அது இப்பொழுது செயல்முறைக்கு வந்து கொண்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAN : Is it not better to stop this discussion because more than 75 per cent of our handloom goods are going outside Madras and they should not also discuss like this.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, இந்த விவாதத்தை நிறுத்துவதா, மேலும் தொடர்வதா என்பது தலைவர் அவர்கள் தீர்மானிக்க வேண்டிய விஷயம்.

MR. SPEAKER : It is a suggestion.